# School of Philosophy, Religion and Culture

---

Centre for Cultural studies announces the completion of the project entitled " The Basic Values of Indian Culture and their relevance to National Integration "
(Date of commencement:03.02.2010. Completion: 01.02.2011)
Duration of the project:One year.
Project Head:Dr.Sri Jagannatha Swami Ph.D.
Research Associate:Sri.S.Karthikeyan M.A.M.Phil.(Ph.D)
* Sample copy of the Chapter I
Copy Right: Shri Lalithambika Trust.

---

## " The Basic Values of Indian Culture and their relevance to National Integration "

**- Sri.S.Karthikeyan M.A.M.Phil.(Ph.D).,**

இது அறிவியல் காலம். இவ்வறிவியல் யுகத்தில் மனிதர்களின் புறவாழ்க்கை அவர்களுக்கு ஏற்றதாகவும், எளியதாகவும், இசைந்ததாகவும், அமையும் வண்ணம் அறிவியல் உதவுகிறது. தற்கால மனிதனின் இடர்பாடுகளையும், கற்கால மனிதனின் வாழ்க்கை வசதிகளையும் ஒப்பிட்டு பார்த்தால் அறிவியலால் மனிதன் அடைந்துள்ள பயன்களை உணரமுடியும். அறிவியல் மனிதனின் புறவாழ்க்கையைத் தான் வடிவமைக்கிறது. ஆனால் புறஉலக வாழ்க்கை மட்டுமே மனிதனுக்கு மகிழ்வினையும், மனஅமைதியினையும் அளித்துவிடுவதில்லை. அறிவியல் கண்டு பிடிப்புகளால் அறிவியல் கருவிகளால் மனிதனுக்குக் காலத்தையும், சக்தியையும் மிச்சப்படுத்தி தந்து உதவமுடியும். இப்படி சேமிக்கப்பட்ட காலத்தையும், மனித ஆற்றலையும், உரிய முறையில் மனிதன் பயன்படுத்தினால்தான் அவனுக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படும். இங்ஙனம் உரிய முறையில் அவற்றை பயன்படுத்தாத பொழுதுதான் மனிதனுக்கு சிக்கல்களும் அல்லல்களும் ஏற்படுகின்றன. எனவே தான் புறவசதிகள் பலவற்றை பெற்றுள்ள இக்கால மக்கள் பலர் மன அமைதியை இழந்து கவலையோடு வாழ்க்கையில் உழல்கின்றார்கள். அறிவியல் சாதனங்களால் இயற்கையை வென்று தம் விருப்பம் போல், வசதிக்கு ஏற்றார்போல் புறநிலைகளை மாற்றி அமைத்துக் கொள்ளும் அறிவுத்திறன் கொண்ட மக்கள் மன அமைதியைத் தேடித்தான் ஓடவேண்டிய நிலை உள்ளது. இதற்குக்காரணம் புறத்தை மட்டுமே அறிவுத்திறத்தால் மாற்றி அமைத்து கொண்டிருக்கும் மனிதன் அகத்தைப் பற்றியே அறியாமல் இருக்கின்ற நிலைதான். எனவே, புறவாழ்வில் காலத்தையும் ஆற்றலையும் அறிவுச் சிந்தனைகளையும், செம்மைப்படுத்தி வாழ்கின்ற நெறி முறையால்தான் வாழ்க்கையில் இன்பமும், மனஅமைதியும் ஏற்படும். இப்படி அகத்தினை – மனத்தினை – ஆன்மாவினைப் பண்படுத்தும் ஒரு சாதனம். ஒரு கருவி, ஒரு நெறி, ஒருவழி முறை என்னும் நிலையில் அமைத்திருப்பதுதான் பண்பாடு எனப்படுவதாகும்.

புற வாழ்க்கை மனித வாழ்வின் ஒரு பகுதி எனில் மற்றொருபகுதி ‘அகம்’ ஆகும். அகவாழ்க்கை பண்பட்டு வளரவில்லை என்றால் புற உலகால் மனிதனுக்கு எந்தப்பயனும் கிட்டாது. எனவே அறிவியலால் புறவாழ்க்கை அமைக்கப்பட்டாலும் கூட அக வாழ்வில் நிகழும் பண்பாடால் தான் மனிதனுக்கு மகிழ்வும், மன அமைதியும் ஏற்படும் என்பது திண்ணம். ஆகையால்தான் நிறைவான வாழ்வின் முழு அடிப்படையான பண்பாட்டினைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

பண்பாடு என்னும் சொல்லாட்சியை அது அளிக்கும் பொருண்மையை – பொருள் விளக்கத்தை முற்றிலும் உணராமலே பயன்படுத்தப்படுகின்ற நிலை இன்று உள்ளது. பண்பாடு ஏன் என்ற வினாவிற்கு விடையளிப்பது கடினம் எனில் அதை விடக்கடினமானது பண்பாடு என்ற சொல்லுக்கான பொருள் விளக்கம்தான். பண்பாடு என்னும் சொல்லாட்சி இக்காலத்தில் தவறுதலாகவும் நோக்கின்றியும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இதற்கு காரணம் ‘பண்பாடு’ என்ற முடியாத நிலை தான். ஏனெனில் அண்மைக் காலத்தில் இச்சொற்றொடர்க்கு நானூறுக்கும் மேற்பட்ட பொருள் விளக்கங்களை அறிஞர்கள் அளித்துள்ள பொருண்மை என்று உறுதியாகக் கூற முடியாத நிலையே உள்ளது. பண்பாடு என்னும் சொல் ஒரு நெகிழ்வுத்திறன் கொண்ட சொல்லாக இருப்பதால்தான் இப்படியான பல்வேறு பொருள் விளக்கங்களை அச்சொல்லுக்கு அளிக்க முடிகிறது என்று கூடக்கூறலாம். எனவே பண்பாடு என்ற சொல்லுக்கு எது சரியான பொருள் விளக்கமாக அமையும் என்பதை அறியும் பொருட்டு பல்வேறு அறிஞர்கள் பண்பாடு என்றால் என்ன என்ற வினாவிற்கான விளக்கங்களை அளித்துள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு சிந்திப்ப அவசியமாகிறது.

## பண்பாடு – பொருள் விளக்கம்

‘பண்பாடு’ என்னும் சொல்லிற்கான ஆங்கிலப்பதம் ‘கல்ச்சர்’ (Culture)[1] என்பதாகும். ஆங்கிலத்திலும் கூட மிக அண்மையில்தான் “கல்ச்சர்” எனும் பதம் உருவானதாக கூறுவர். பேகன் எனும் அறிஞர்தான் முதன்முதலில் இச்சொல்லாட்சியை பயன்படுத்தினார். அவருடைய காலம் கி.பி.1561லிருந்து 1626 வரை எனக் கருதப்படுகிறது. எனவே, கல்ச்சர் என்ற சொல் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது எனலாம்.[2] இச்சொல் ‘கொலர்’ (Colere) என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ‘கொலர்’ (Colere) என்னும் இலத்தீன் சொல்லின் பொருள் நிலத்தைப் பண்படுத்துதல். (Cultivate) உழுதல் என்பதாகும். அதனால்தான் நிலத்தில் பயிர் செய்கின்ற விவசாயத்தினை (Agriculture) அக்ரிகல்சர் என்று சொல்லும் நிலை வந்ததாகவும் கூறுவர்.

‘பண்பாடு’ எனும் தனிச்சொல் தமிழில் இல்லை. முதன் முதலில் ‘கல்ச்சர்’ என்னும் ஆங்கிலச் சொல்லைப் ‘பண்பாடு’ எனத் தமிழில் 1937ல் டி.கே.சிதம்பரநாத முதலியார் பயன்படுத்தினார் எனக் கூறுகிறார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. இக்கருத்தையே புலவர் கா.அப்பாதுரையும் வலியுறுத்துகிறார்.[3]

‘பண்பாடு’ எனும் சொல் பண்பு + படுதல் ஆகியவற்றின் சேர்க்கையாகும். இச்சொல்லில் ‘பண்பு’ என்பது உயர்ந்த செம்மையான உள்ளம் எனபொருள்படும். ‘படுதல்’ என்பது ‘ஒழுகுதல்’ அல்லது ‘வழிசெல்லுதல்’ எனப்படும். எனவே பண்பாடு என்பதற்கு உயர்ந்த ஒழுக்கத்தின் வழிசெல்லுதல் என்று பொருள் கொள்ளலாம். ‘பண்’ என்றால் ‘இசை’, ‘இசைவு’, ‘இசைதல்’ ஆகிய பொருளின் ‘இசைந்த வாழ்வு’ அல்லது ‘பொருந்திய வாழ்வு’ எனப்பொருள் தரும் எனவும் விளக்குவர்.[4]

‘பண்’ எனில் இசை, இசைந்த ஒலி, ஒத்திசைக்கும் ஒலி எனப்பொருளாகும். இதிலிருந்து பிறந்த ‘பண்பு’ என்ற சொல்லுக்கு இயல்பு. ஒத்த இயல்பு, சிறந்த இயல்பு. தன்னைப்போல பிறரையும் நேசித்தல், ஒத்த தன்மை எனப்பல பொருளைத் தரும். இவற்றின் மூலம் தகுதி, அமைவு, தகைமை,

செப்பமாதல், சீர்திருத்துதல், இயல்பு, தன்மை, முறை செய்கை ஆகியன பண்பை விளக்க வந்த சொற்கள் எனலாம்.[5]

'பண்பாடு' என்னும் சொல் சங்க இலக்கியங்கள் அவற்றிக்கு பிற்பட்ட இலக்கியங்கள் முதலியவற்றில் இடம்பெறவில்லை எனினும், 'பண்புடைமை' என்ற சொல் இலக்கியங்களில் இடம் பெறுவதைக் காணலாம். பண்புடைமை என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் பொருள் கூறும் பொழுது, "பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்"[6] என விளக்கமளிக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியும், பண்பு என்னும் சொல்லிற்கு "பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம்"[7] எனப்பொருள் தருகிறது. மேலும், 'பண்பு' எனும் இச்சொல்லிற்கு அழகு, முறை, குணம், இயல்பு, தன்மை, தொண்டு, எனத் தமிழகராதி பல பொருள்களைக் கூறுகிறது.[8] பண்பு என்னும் சொல்லுக்குப் பலவாக பொருள் விளக்கப்பட்டிருப்பினும், 'பிறர் இயல்பு அறிந்து நடக்கும் நற்குணம்' என்ற பொருளே இவ்வாய்வேட்டிற்குப் பொருத்தமாக அமைகிறது எனலாம்.

'பண்பாடு' என்ற பெயர்ச்சொல் 'பண்பாடு' எனும் வினைச்சொல்லில் இருந்து உருவான சொல்லாகும். 'பண்பாடு' என்பதற்கு 'திருத்தம் பெறுதல்' 'பக்குவப்படுதல்' எனப்பொருள் கொள்ளலாம்.[9] பண்பு பொருந்துதலே பண்பாடு எனப்படும்.

'பண்படுதல்' என்பது 'செம்மைப்படுதல்' அல்லது 'சீர்திருத்துதல்' என்பதாகும். இச்சொல் மனிதனின் செம்மைப்பாட்டை விளக்குவதாகும். பண்படு எனும் சொல்லிலிருந்து வந்ததே 'பண்பாடு' என்னும் சொல்லாகும். சான்றாக உடன்படு – உடன்பாடு; செயல்படு – செயல்பாடு; வழிபடு – வழிபாடு; முரண்படு – முரண்பாடு; எனும் சொல் வழக்கு 'பண்பாடு' என்று மாறியிருக்கவேண்டும்.[10]

## 'பண்பாடு' அறிஞர்கள் கருத்துரைகள்

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாடே பண்பாடு என்று அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கூறுவார்.

அவரின் கருத்தின்படி அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பலப்பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனதைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்.[11]

"நிலத்தைப் பண்படுத்துவதுபோல் இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு நிலத்தைப் பயிரிடுவதற்காகப் பண்படுத்துகிறோம். அதுபோல மக்களினத்தைப் பண்படுத்தி சிறந்த இனமாக மாற்றுவதால் "இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு" என்று அப்பாத்துரையார் கூறுகிறார்.[12]

பண்படுவது பண்பாடு, பண்படுதல், சீர்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் "பண்பட்ட செந்தமிழ்" என்றும் கூறும் ஞா.தேவநேய பாவணர் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்லுவது வழக்கம் என விளக்கமளிக்கிறார்.[13] பாவாணர் உள்ளத்தைத் திருத்திப் பண்படுத்த வேண்டும் என்றும், அங்ஙனம் திருந்திய உள்ளததைப் பண்பட்ட உள்ளம் என்றும் அழைத்தார்.

டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்களும் பயன்படுத்திய நிலம் என்று சொல்லுவது போலப் பண்பட்ட மனம் என்றால் பண்பட்ட மனிதப் பாங்கு என்றும் கூறலாம் என்று கூறியுள்ளார்.[14] இவருடைய கருத்தின்படி பண்பாடு என்பது செப்பம் செய்யப்பட்ட, பண்பட்ட, திருந்திய, திருத்தம் பெற்ற உள்ளம் என்பது புலனாகிறது. இவர் மனிதத் தன்மையைப் பண்பாடு எனக் கூறுகிறார். இவர்களின் கூற்றுப்படி உள்ளம், செயல், இனம் ஆகிய இம்மூன்றும் திருந்துவது, திருத்தம் பெறுவது பண்பாடு என உள்ளத்தை அடிப்படையாக வைத்தே பண்பாட்டுக்கு விளக்கமளித்துள்ளனர்.

## பண்பாடும் நாகரிகமும்

சங்க கால இலக்கியங்களிலிருந்து அக்காலத்தில் மனிதனின் நற்செயல்களைக் குறிக்கப் பண்பாடு எனும் சொல் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. நற்செயல்களை குறிக்க நாகரிகம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இக்கருத்தை ‘‘முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்’’[15] என்ற நற்றிணைப்பாடலும்’’ பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்’’[16] என்ற திருக்குறளும் வலியுறுத்துகின்றன.

‘கண்ணோட்டம்’ என்ற பொருளில் இங்கு நாகரிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘‘கண்ணோட்டமானது கிருபையாகிய பார்வை பயின்றார் கூறின மறுக்க மாட்டாமை, பொறுத்தல் எனப் பலவகைகளில் விளக்கப் பெறுகின்றது’’[17] பழக்கப்பட்டவர் கொடுக்கும் விஷத்தைக் கூட உண்பதாகிய செயல் பண்பாடு எனக் கருதப்பட்டாலும், அதனை அக்காலத்தில் இருந்த நாகரிகம் என்ற சொல்லாலேயே அழைத்தனர். எந்த வகையான செயலை நாகரிகம் என்று குறிப்பிட்டார்களோ அதையே ‘பண்பு’ எனவும் குறிப்பிட்டனர்.[18] அந்த செயலைச் செய்தவரைப் ‘பண்புடையார்’ என்றும் குறித்தனர். இதனையே

‘‘பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்

மண்புக்கு மாய்வது மன்’’[19]

என்கிறார் திருவள்ளுவர்.

காலரிட்ஜ் என்பவர் 1830 ஆம் ஆண்டிலேயே அகம் சார்ந்த பண்படுத்துதலுக்கும், புறம் சார்ந்த நாகரிகத்திற்கும் இடையே உள்ள புறவேற்றுமையை எடுத்து கூறினார். இக்கருத்தையே மாத்யூ அர்னால்டு மற்றும் தாமஸ் கார்லில் ஆகியோரும் வலியுறுத்துகிறார்கள்.[20] பண்பாடு, நாகரிகம் இவ்விரண்டு சொற்களும் ஏறக்குறைய ஒரே பொருளையே தருகின்றது எனச் சில மேலைநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அகவளர்ச்சி குறைந்து, புறவளர்ச்சி வளர்ந்த இக்காலத்தில் அகவளர்ச்சியைப் ‘பண்பாடு’ என்றும், புறவளர்ச்சியை நாகரிகம் என்றும் அழைக்கிறோம்.[21] ஜி.எஸ்.கூர்யே என்பார் எவற்றைப் பெற்றிருக்கிறோம் என்பதைப் பொறுத்தது நாகரிகம். எவற்றின் அடிப்படையில் எவ்வாறு ஒழுகுகிறோம் என்பதையொட்டி அமைவது பண்பாடு.[22] என்று கூறி விளக்குகிறார். பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் வேறுபாடு இல்லாததுபோல் தோற்றமளிக்கினும் ‘பண்பாடு’ என்பது மனவளர்ச்சியைப் பொறுத்து அமைவது. நாகரிகம் உடலளவில், செயலால் அமைவது. பண்பாடு உள்ளத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்றும், நாகரிகம் புறத்தோற்ற வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறலாம்.

கே.எம்.பணிக்கர் என்பவர் நாகரிகத்தையும், பண்பாட்டையும் சமுதாயத்தோடு ஒப்புநோக்கி, ‘‘சிறந்த கட்டுப்பாட்டுடன் மக்கள் எங்கு எல்லா வசதிகளும் பெற்று நலமுடன் இருக்கின்றனரோ அது நாகரிகச் சமுதாயம் என்றும், உயர்ந்த கொள்கை, சிறந்த ஒழுக்கம், உளம் கலந்த தொடர்பு, ஆழ்ந்த அன்பு, இவை

எங்கு இருக்கின்றனவோ அது பண்பாடுள்ள சமுதாயம்'' எனக் கூறி இதுதான் நாகரிகச் சமுதாயத்திற்கும் பண்பாடுள்ள சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடு[23] எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்தை ஏற்றுக் கொண்டால் இயற்கையாக இருப்பதும், மாறாமல் தொடர்ந்து வருவதும் பண்பாடு என்றும், புற வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுத்துவதை நாகரிகம் என்றும் சொல்லலாம்.

சுருங்கச் சொல்லின், ''உள்ளத்தின் செம்மை பண்பாடும், உள்ளத்திற்குப் புறம்பான உணவு, உடை, உறையுள் முதலியவற்றின் செம்மை நாகரிகமும் ஆகும். ஆகவே, இவற்றை முறையே அக நாகரிகம், புறநாகரிகம் எனக் கொள்ளினும் பொருந்தும்''[24] என விளக்குகிறார் ஞா.தேவநேயப் பாவணர். புறவளர்ச்சியைக் குறிக்கும் 'நாகரிகம்' என்னும் சொல் 'நகர்' என்ற சொல்லிருந்து பிறந்திருக்க வேண்டும். 'நகர் அகம் நகரம்; நகரிகம்; நாகரிகம்' எனவாயிற்று.[25] அறிவு வளர்ச்சியின் காரணமாக நகரத்தில் வாழும் மக்கள் கிராமத்தில் வாழும் மக்களை விட திருந்திய மேன்மையான வாழ்க்கையை உடையவர். எனவே, நகரத்தில் உள்ள மனிதர்களிடமிருந்து தான் நாகரிகம் என்ற சொல் முதலில் பிறந்திருக்க வேண்டும் எனலாம். மக்கள் முதன்முதலில் நகரங்களாலேயே நாகரிகம் அடைந்துள்ளனர். எனவே நகரப் பெயரிலிருந்து 'நாகரிகம்' எனும் சொல் இலத்தீன் மூலச்சொல்லான நகரப் பெயரினின்று தோன்றியது ஆகும். இலத்தீன் மொழியில் 'Civitas' என்ற சொல் 'City' அல்லது 'City State' என்று பொருள்படும். Civis-Citizens Civilis என்னும் இலத்தீன் சொல்லே ஆங்கிலத்தில் நாகரிகம் எனப்படும் Civilize என்ற ஆங்கிலச் சொல்லாயிற்று. எனவே நகரத்திற்கும் நாகரிகத்திற்கும் தொடர்பு உண்டு என்பது தெரிய வருகிறது.[26]

## இந்திய பண்பாடு

உலகில் தோன்றியுள்ள மக்கள் அனைவரும் இயல்பாகவே அமைதியும், ஆனந்தமும் நிறைந்த வாழ்வினை அடைய விரும்புகின்றனர். இவ்வுலகம் செம்மையாக இயங்காவிடின் மக்கள் விரும்பும் இக்குறிக்கோளினை அடைய முடியாது. பண்புடையார் துணையாலேயே உலகியல் நடைபெற்று வருகிறது. இல்லையேல் உலகியல் நடைபெறாது.

இந்தியப் பண்பாடு என்பதற்கு இந்திய மக்களுக்கே தனித்து உரிய திருந்திய மனப்பான்மை என்பது பொருளாகும். இதற்கு முன்னர் இச்சொல் கலாசாரம் என்று அழைக்கப்பட்டது. உண்மையான பண்பாட்டின் உயிரோட்டமும், உயிர் துடிப்பும் உயர்ந்த மக்களின் உள்ளத்தின் அடித்தட்டில் அமைந்துள்ளன. கால வெள்ளத்தில் அழிந்துபட்ட எகிப்திய, கிரேக்க, உரோமானிய, பாபிலோனியப் பண்பாடுகள் ஒரு காலத்தில் மிக்க உச்ச நிலையினை அடைந்த பண்பாடுகளாக விளங்கின. ஆனால் என்று நிலைத்ததாய், அழியாத அமைப்போடு, நிலைபெற்று உறுதியாகத் திகழ்வது இந்தியப் பண்பாடே ஆகும். இந்த அழியாத தன்மையே இந்தியப் பண்பாட்டின் ஒரு சிறப்புத் தன்மையாகும்.

## இந்தியப் பண்பாட்டின் சிறப்புகள்

ஒரு காலத்தில் எகிப்திய, கிரேக்க, உரோமானிய, பாபிலோனியப் பண்பாடுகள் மிக உச்ச நிலையில் இருந்தன. கால வெள்ளத்தில் அவை அழிந்து போயின. ஆனால் இந்தியப் பண்பாடு அழியாத அமைப்போடு இன்றும் நிலைபெற்று உறுதியாகத் திகழ்ந்து வருவது அதன் ஒரு சிறப்புக் கூறு ஆகும் என்று முன்பே குறித்துள்ளோம். ஆனால் அதனைவிடச் சிறப்பானது இந்தியப் பண்பாட்டின் மிகச் சிறந்த பண்பு அதன் சகிப்புத்தன்மையேயாகும். அது தன்னை நாடி வந்த யூதர்கள், இஸ்லாமிய, கிறித்தவ மக்களின் பண்பாட்டுக் கூறுகளை வெறுக்காமல் அவற்றை சகித்துக்கொண்டு அவற்றை அணைத்தே

செல்லுகின்றது. சகிப்புத் தன்மையால் இந்தியப் பண்பாட்டுக்கு விளைந்த நலம் பல்வேறு பண்பாடுகளின் கூட்டிணைப்பாக்கம் எனலாம். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து இன்று வரை ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய, ஐரோப்பிய, இஸ்லாமிய, கிறித்தவப் பண்பாடுகளின் சீரிய கூறுகளின் கூட்டிணைப்பாகவும் இன்றும் சிறந்து விளங்குவது இந்தியப் பண்பாடேயாகும்.[27]

இந்தியப் பண்பாட்டில் வேற்றுமைக் கூறுகள் இருப்பினும் அவை மன நிறைவையே அளிக்கின்றன. வேற்றுமைகளைப் பல்வேறு துறைகளில் காணமுடிகிறது. இச்சிறு துணைக் கண்டத்தில் பல்வேறு இனங்கள், மொழிகள், எண்ணங்கள், சமயங்கள், தத்துவங்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் நிலவுகின்றன. இவை இமயம் முதல் குமரி வரை பரந்து கிடப்பதைக் காணலாம். இவ்வாறு வேற்றுமை பிரதிபலித்தாலும் அதன் ஊடே ஒரு ஒற்றுமை சிறப்புற விளங்குவது வெள்ளிடைமலை. அதுவே இந்தியப் பண்பாட்டின் தனிச்சிறப்பும் ஆகும்.[28]

இறையுணர்வு, ஆன்மீக வேட்கை இவை இரண்டினைப் பெரும் அடித்தளங்களாகக் கொண்டு இயங்குவது இந்தியப் பண்பாடு. இப்பண்பாட்டின் குறிக்கோள் அழியாத ஆன்மாவின் வேட்கையாகிய வீடுபேற்றினை அடைய இறையுணர்வு தேவை என்பதாகும். இவ்வாறு ஆன்மீக மேம்பாட்டினை இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது இந்தியப் பண்பாட்டின் தனிப் பெருஞ்சிறப்பு ஆகும்.[29]

சாதி, சமயம், காலம், இனம், பால் வேற்றுமைகளைக் கடந்து உலக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பண்பாடாகவும் அனைவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இந்தியப் பண்பாடு விளங்குகிறது.

பல நூற்றாண்டுகளாக இப்பண்பாட்டினைப் பேணிக் காக்க அரசு ஆதரவு இல்லாதிருந்தது. மேலும் பல்வேறு அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இந்தியப் பண்பாட்டினை வேருடன் களையும் முயற்சிகள் தோல்வியடைந்தன. அவற்றினைத் தாங்கிக் கொண்டு நமது பண்பாடு இம்மண்ணில் சிறிதும் அழியாது வளர்ந்து ஆலமரமெனத் திகழ்கின்றது.

இந்தியாவிலே பிறந்து, வளர்ச்சியுற்ற இப்பண்பாடு உலகெங்கும் விரிந்து பரந்து கிடப்பதை வரலாற்று ஆசிரியர்களும் மொழியியல் அறிஞர்களும், தொல்பொருளாய்வாளர்களும் எடுத்தியம்புவதைக் காணலாம்.

## இந்தியப் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள்

சங்க இலக்கியங்கள், நன்றியுணர்வுடைமை, உயர்ந்த கண்ணியம், தூய்மை, கொடை, கல்வி மற்றும் கற்றலில் ஆர்வம் கொள்ளல், தேசிய உணர்வுடைமை, ஆண், பெண் சமவுரிமையுடைமை, அறம் பொதிந்த குடியரசு முதலியவற்றை இந்தியப் பண்பாட்டின் சிறப்பான அடிப்படைக் கூறுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

## சமயச் சார்பின்மை

இந்திய பண்பாட்டில் தத்துவ அடிப்படையில் உயர்ந்தது சமயக் கோட்பாடாகும். சொல்லிலும் செயலிலும் எண்ணத்திலும், மதத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லாதிருத்தல் வேண்டும். இதுவே சமயச் சார்பின்மையின் சாரமாகும். இந்தியாவில் சுதந்திரக் கனல் கொழுந்து விட்டெரிந்தபோது இன, மத, மொழிப் பாகுபாடுகளின்றி அனைவரும் பங்கேற்றதில் சமயச்சார்பின்மையின் கருத்தும் விடுதலை வேட்கையுடன் ஒருங்கே ஊட்டி வளர்க்கப்பட்டது எனக் கூறலாம். இந்தியா விடுதலை அடைந்தபொழுது மதத்தின் அடிப்படையில் நாட்டின் பிரிவினை ஏற்பட்டதாலும், புதிதாக விடுதலைபெற்ற ஆசியாக் கண்டத்தின் பல நாடுகளுக்குப்

புதுக்கொள்கைகள் தேவைப்பட்டதாலும், பழம்பெரும் நாகரிகம் பெற்ற இந்தியாவில் பல்வேறு மதத்தவர், பல மொழிகள் பேசுவோர் வாழ்ந்து வந்தாலும், கூட்டாட்சி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு நாட்டைச் சமயச் சார்பின்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கினர். இதில் ஜவகர்லால் நேரு போன்ற பெருந்தலைவர்களுக்குச் சிறப்பான இடம் உண்டு.

இந்திய அரசியல் அமைப்பின் (1950) தோற்றுவாய் (Preamble of the Indian Constitution) சம உடைமை, மதச் சார்பின்மை (Socialism, Secularism) முதலியவற்றை உறுதிபடுத்தியது. இதன் விளைவாக இந்தியா 'இறையாண்மையுடைய, சமஉடைமை, சமயச்சார்பற்ற சனநாயகக் குடியரசு' (Sovereign Socialist Secular Democratic Republic) என்று மாறியது. எனவே, இன்றைய அளவில் மதச் சார்பின்மை என்பது ஒரு கோட்பாடு மட்டுமன்று, ஒரு சிறந்த குறிக்கோளும் ஆகும்.[30]

சமயச் சார்பின்மையின் கூறுகள்

1. மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தத்தம் மதத்தைப் பின்பற்றியொழுக முழு உரிமையுண்டு.
2. தாம் சார்ந்திருக்கும் மதம் காரணமாக ஆட்சியாளர்கள் மக்களிடையே வேற்றுமை பாராட்டலாகாது.
3. மதத்தின் அடிப்படையில் நாட்டின் பொதுச் சட்டங்கள் இயற்றப்படுதல் கூடாது. ஒரு குறிப்பிட்ட மதத்தின் வழிபாடுகள், நெறிமுறைகள், தத்துவக் கோட்பாடுகள் முதலியவற்றை அரசு முன்நின்று பிற மதத்தவர்களை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துதல் கூடாது.
4. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் எந்த ஒரு மதத்தின் மீதும் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ சட்டம் மூலமாகவோ தாக்கம், வற்புறுத்துதல் (Influence, Pressure) மூலமாகவோ அரசாங்கத்தின் தலையீடு கூடாது.
5. வாய்ப்புகள் அளித்தல், அரசில் பங்கு அளித்தல் ஆகியவற்றில் அரசாங்கத்தினர், எல்லா மதத்தினர்க்கும் ஒத்த உரிமைகளை வழங்கவேண்டும்.
6. எந்த மதத்தினரும் அல்லது பிரிவினரும் தத்தம் மதக் கோட்பாடுகள், தத்துவக் கருத்துக்கள், வழிபாடுகள், மதச்சடங்குகள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் அரசாங்கத்தின் குறுக்கீடு கூடாது. ஆயினும் நாட்டின் பொதுச்சட்டம், ஒழுங்கு முதலியன மீறப்பட்டால், அவற்றை நிலை நாட்ட அரசாங்கத்திற்கு முழு உரிமை உண்டு.
7. அரசாங்கத்திற்குத் தனியே வழிபாட்டு முறைகள், மந்திரங்கள், ஆகமங்கள் என்பன அறவே கிடையாது. அதன் நியதிகள் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்தவையாக இருத்தல் கூடாது.
8. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அதன் அரசியல் கோட்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகள், சமுதாய வளர்ச்சியில் பங்கு, அறிவியல், கலை ஆகிய அனைத்து துறைகளிலும் பொதுத் தன்மையும், நாடு தழுவிய நலன்களும் எந்த ஒரு மதத்தின் மீதும் அறவே காழ்ப்புணர்ச்சி இல்லாத, பாரபட்சமற்ற, முழுமையான நடு நிலைத்தன்மையும், (Absolite Neutrality) இருத்தல் வேண்டும்.

சுருங்கக் கூறின் மதன் என்பது தனி மனிதனின், மனிதக் கூட்டத்தின் சொந்த ஆன்மீக வழியைச் சார்ந்த இறைக் கோட்பாடு. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவவேண்டிய வழிமுறையாகும். அரசு என்பது மாந்தர்

அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள இறையாண்மை பெற்றுள்ள சமுதாயத்தின் நலன் கருதி அமைந்துவிட்ட கூட்டமைப்பாகும். இக்கூட்டமைப்பைக் கட்டுப்படுத்தும் உச்சிப் பீடத்தில் அமைந்திருக்கும் அரசாங்கம் என்னும் நிறுவனம் எந்த ஒரு மதத்தையும் கட்டுப்படுத்தாதிருத்தலே சமயச் சார்பின்மைக் கோட்பாட்டின் முழுவிளக்கமாகும்.

## வேற்றுமையில் ஒற்றுமை

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு இனங்கள், சமயங்கள், மொழிகள், தத்துவங்கள், கருத்துக்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், ஆகிய இவை அனைத்தும் வேற்றுமையை பிரதிபலித்தாலும் அதனூடே ஒரு ஒற்றுமை சிறப்புற விளங்குவது இதன் சிறப்புகளுள் ஒன்றாகும்.[31]

மேலும், ஒரு பன்மைச் சமுதாய அமைப்பில் இயங்கும் இந்திய சமுதாயத்தில் ஒவ்வொரு குழுவினருக்கும் ஒவ்வொரு வகையான அற அமைப்புகளை உண்டாக்கிச் சென்றுள்ளனர். அவ்வடிப்படை ஏற்பட்ட பிறகு சமுதாய நிலையங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கு விதிக்கப்பட்ட அறக் கோட்பாடுகளுக்கு இணங்கியே செயல்படும். இவ்வாறு பல்வேறு சமுதாய நிலையங்களின் அடிப்படையில் அமைந்த இந்தியப் பண்பாடு வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒரு பண்பாடாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. அகத்தே பல வேறுபாடுகள் இருப்பினும் இந்தியப் பண்பாடு ஒரு சில பொது தார்மீகக் கருத்துக்களை உள்ளடக்கியிருத்தலால் மக்களிடையேயும் பல பொதுவான நம்பிக்கைகள், வாழ்க்கைக் குறிக்கோள்கள் மதிப்பீட்டுப் பாணிகள் முதலியவை காணப்படுகின்றன. இந்தியத் தன்மை என்பதொன்றை இத்துணை வேறுபாடுகளுக்கிடையே இயங்கும். இச்சமூகத்தினரிடம் காணமுடியும். இவ்வாறு பன்மையும் ஒருமையும் ஒருங்கு விளங்கும் இந்நிலையைப் பன்மையில் ஒருமை என்று அழைக்கலாம்.

## சகோதரத்துவம்

தனிமனிதர் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பை 'சமுதாயச் சமன்மை' என்பர்[32] இவ்வமைப்பு உறவு மோதல்களின்றி செவ்வனே இயங்குவதாகும். தமிழர் சமுதாயம் சாதி மற்றும் வர்க்க பேதமற்ற சமன்மைச் சமுதாயமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்ப்பண்பாட்டின் ஓர் சிறப்பம்சமாகும். சமுதாயத்தில் வாழும் மக்கள் பிறருக்கு எவ்வகையிலும் தீங்கு செய்யாமல் வாழ்வதே நல்ல வாழ்க்கையாகும். அதற்குச் தேவையான அன்பு. அறம், பொதுமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலிய பண்புகளை பேணுதல் வேண்டும் எனத் தமிழ் இலக்கியங்களும் வற்புறுத்துகின்றன.

மனிதர்கள் அனைவரும் சரிநிகர் சமமானவர்களே என்பதைக் கணியன் பூங்குன்றனார், "யாதும் ஊரே யாவரும் கேளிர்"[33] எனக் கூறி விளக்குகின்றார். இதன் மூலம், இவர் வரம்புகளற்ற உலகப் பொதுமைமிக்க ஒரு சமுதாயத்தை அமைக்க விரும்புவதை அறியலாம்.

மனிதனின் நல்வாழ்வும், அழிவும் அவனது முயற்சியினால் வருவதேயாகும்; பிறரால் வருவதில்லை. துன்பம், வினைப்பயனால் ஏற்படக்கூடியதாகும். இறப்பு என்பது வழக்கமாக நடக்கக்கூடிய ஒன்றாகும் வாழ்க்கை இனிமையானது என ஒரு போதும் எண்ணுதல் கூடாது. வாழ்க்கையானது நாம் முற்பிறவியில் செய்த வினையின் பயனேயாகும். பெரியோரைப் புகழ்தலும், சிறியோரை இகழ்தலும் கூடாது. உலகத்தில் உள்ள அனைத்து ஊர்களையும் நமது சொந்த ஊராகவும், உலகில் வாழும் அனைத்து மக்களையும் நமது உறவினர்களாகவும் நினைக்கின்ற சகோதரத்துவத்தை உணர்த்துவதை உணரலாம்.

அகிம்சை

அகிம்சை என்பதன் நேர்பொருள் கொல்லாமை அல்லது இன்னா செய்யாமை என்பதாகும். இம்சை என்பது கொல்லுதல் அல்லது இன்னாசெய்தல் ஆகும். கொல்லுதல் என்பது உடம்பைத்தான் தாக்குமேயொழிய உயிரைத் தாக்காது. எனவே இம்சை என்பது உடலைப்பற்றியது என்றும், அகிம்சை என்பது எதிர்மறையில் பொருள் கொள்ளாமல், உடன்பாட்டு முறையின் பொருள் கொள்ள முற்பட்டால் 'அகிம்சை' என்பதற்கு 'அன்பு' என்பதே பொருளாகும். அன்பு என்பதே மனத்திலே தோன்றும் உணர்ச்சிகள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும். மண்ணுயிரைத் தன்னுயிர்போல் மதிக்கும் இயல்புடைய மனப்பான்மையே அன்பு எனப்படும். இதனைக் கைம்மாறு கருதாது கருணை கூர்ந்து காட்டும் அன்பே உண்மையான அன்பு எனலாம். எல்லா உயிர்களும் இறைவனின் படைப்பாகும். எவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி வாழ்ந்து வருகிறானோ அவனே சிறந்த பண்பாடுடையவன் என்றாகிறான்.

இந்தியப் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளாகச் சமயச் சார்பின்மை, வேற்றுமையில் ஒற்றுமை, சகோதரத்துவம், அகிம்சை போன்றவை அமைந்திருந்தாலும் இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது சகிப்பத்தன்மை எனும் உயர் குணமேயாகும். சகிப்புத்தன்மையே இந்தியப் பண்பாட்டின் அடிப்படையாக இயங்கு சக்தியாக உள்ள திறனை அனைவரும் உணர வேண்டும்.

## சகிப்புத் தன்மை – பொருள் விளக்கம்

"சகிப்புத்தன்மை" எனும் சொல்லிற்கான தமிழ்ப் பதம் "பொறுதியெல்லை", "பொறுதி", "பொறுத்தமைதல்"[34] என்பதாகும் என கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றன.

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் தமிழ் அகராதி கூற்றின்படி Tolerance என்ற சொல்லுக்கு "சகித்தல்", "பொறுத்தல்", "மன்னித்தல்" (To bear, brook, for bear, to excuse) என பல பொருள்களை குறிப்பிடுகின்றன.[35] 'சகித்தல்' என்பது சமாதி சட்க சம்பத்துக்களுள் சுக துக்கங்களை ஒரு நிகராக அனுபவிப்பது, என்பதாகும்.

ஆங்கில அகராதியின் மேற்கோள்படி சகிப்புத்தன்மை என்பது "ஒருவருக்கும் மற்ற இன்னொரு நபருக்கும் இடையே வேறுபட்டுக் காணப்படுகின்ற நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் ஏற்றுக் கொள்ளுதல் தற்போதைய பிடிவாதத்திலிருந்து சுதந்திர உணர்வு, பிறர் நம்பிக்கைகளை ஏற்க மறுத்தல் ஆனால் அவற்றை புரிந்து கொள்ளுதல்[36] ஆகும்.

'சகிப்புத்தன்மை' என்ற வார்த்தைக்கு வலியையோ, வேதனையையோ பொறுத்துக் கொள்ளுகின்ற மனிதனின் தன்மை போன்றவைகளையே கூறி வந்தனர். இவை அனைத்தும் சகிப்புத்தன்மை என்ற வார்த்தைக்கான சிறப்ப பொருளில் அமைந்துள்ளன. 'சகிப்புத்தன்மை' என்பது அன்பு, சக்தி, என்ற குணங்களைப் போல பல பரிணாமங்களைக் கொண்டுள்ளது[37] எனக் கூறலாம்.

கீதையிலும், பிற நூல்களிலும் காணப்படுகின்ற 'சகிப்புத்தன்மை' என்ற சொல்லுக்குப் 'பொறுத்துக் கொள்ளுதல்' என்ற ஆங்கில வார்த்தைக்குரிய பொருளையே குறிக்கின்றன.[38] சமஸ்கிருத சொல்லான 'சஹானா' வும் சகிப்புத்தன்மை "பொறுத்துக்கொள்ளுதல்" அல்லது 'பொறுமையாக இருத்தல்' என்றே குறிக்கின்றன.[39]

'சகிப்புத்தன்மை' என்பது தனக்கு மனதளவில் உடலளவில் தன்னாலோ பிறராலோ ஏற்படக்கூடிய துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமை

என்பதாகும். ‘‘பொறுமை கடலினும் பெரிது’’ என பெரியோர் கூறுவர். ‘‘பொறுத்தார் பூமியாள்வார்’’ என்பது நாமறிந்த பழமொழி ஆகும்.

தவம் தொடர்ந்து செய்யும் போது மனதில் உள்ளொளி பெருகி, சினம், முற்றிலும் தவிர்க்கப்பட்டு பொறுமையை காக்கும் தன்மை அதிகரிக்கின்றன.[40]

‘‘அயலகப் பண்பாட்டைச் சேர்ந்த ஓர் ஆண் அல்லது பெண் உள்ளூர்ப் பண்பாட்டில் காணப்படுகின்ற நடைமுறை விதிகளுக்குட்பட்டு நம்முடைய தினசரி வாழ்வில் வாழ வகை செய்யும் அமைதிப்பாதையே சகிப்பத் தன்மை என்று அழைக்கப்படுகிறது.’’[41]

## இந்தியப் பண்பாட்டு மரபு வளர்ச்சியில் சகிப்புத் தன்மையின் பங்கு

இயற்கையான, பண்புகளையும், இயல்பான சுபாவத்தையும், சிறந்த மனப்பான்மையும் கொண்ட மனிதனின் சிந்தனையில் முதல் தேவையான இணையற்ற அமைதி, சாந்தம் ஆகியன காணப்படுகின்றன. இந்த அமைதியைத் தனது நாடு பெற்ற சுதந்திரத்தைப் போன்று எண்ணுகின்றான். ஆயினும் உண்மையில் மனிதனுடைய எல்லா வரலாற்று காலங்களிலும் பார்க்கின்ற பொழுது மனிதன் வெறுப்புடையவனாகவும், வன்மம், முரட்டுத்தனம், ஹிம்சை செய்கிறவனாகவும், எதையுமே அழிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். மேலும் ஏற்ற அறிவு, திறமை இல்லாத காரணத்தினால் எதையுமே தெரிவிக்க இயலாதவனாகவும் இருக்கின்றான். அவனால் பாராட்டு, உயர்வு, சமமதிப்பு, மற்றும் தன்னை மேன்மைபடுத்த இயலாமல் தனது மதிப்பை அறியாமல் வாழ்ந்து வந்தான் என்பதனை வரலாறுகள் வாயிலாக அறிய முடிகின்றது.

இழிவான், முரட்டு குணமுடையவனுமான, வெறுக்கத்தக்கவுமான, அநாகரிகமான மனிதனுடைய வாழ்க்கை வரலாற்றில் போராட்டம் அல்லது முரட்டு குணம் என்பது கௌரவச் சின்னமாகக் கருதப்பட்டது. இந்தப் போராட்டத்தின் மூலம் தனது மூடி வைக்கப்பட்ட எண்ணற்ற திறமையைப் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புகள், புதிய போர்க்கருவிகள், புதிய உயிரினங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்கினான். சமயத்தின் வழி இது சிறந்த உண்மையாகும். சமய அனுமானத்தின் வழியாக மனிதன் சிறந்தவனாவான். எவ்வாறெனில் மனிதன் சிறந்ததொரு மனோசக்தியை உடையவனாகவும், சுயமாக புரிந்துகொள்வதிலும், பிறர்மீது இரக்கம் கொள்வதிலும், சிறந்து காணப்படுகின்றான்.[42]

உலக சமுதாயத்தில் காணப்படுகின்ற குழப்பம், பிணக்கு பகை, விரோதம், யுத்தம் ஆகியவற்றில் தலையிட்டு வெற்றியும் கண்டான். மேலும் தெய்வீகத்தன்மை வாய்ந்த மனிதன் ஒத்த இணக்கமாகவும், நன்மை செய்கின்றவனாகவும், தரும சிந்தனைகளில் மேம்பட்டும், அன்பு நிறைந்த செயலோடு கூடி அன்பாகவும், பரிவாகவும் இருந்து இந்து சமுதாயத்தில் சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்து வருகின்றான்.[43]

மனிதன் ஒருபுறம் இயற்கையிலேயே தெய்வீகத் தன்மை உள்ளவனாகவும், புண்ணிய புருஷனாகவும், சமாதானத்தை நேசிப்பவனாகவும், நட்புக் கொள்பவனாகவும் இருக்கின்றான். அதே வேளையில் கொடுஞ்செயல் புரிபவனாகவும், புனிதத் தன்மைக்கு எதிரானவனாகவும், புனிதத் தன்மைக்குத் தீங்கு விளைவிப்பவனாகவும், பயபக்தி அற்றவனாகவும், பகைமை உணர்வு உள்ளவனாகவும் இருக்கின்றான். இவ்விதமான இரு குணங்களின் மூலம் மனிதனின் உண்மை நிலையை உணர முடிகின்றது.

இவ்வாறு மனிதன் இரு வேறு நிலைகளில் இருந்தாலும் ஆச்சரியப்படும் வகையில் மனிதன் மிதவாதியாகவும், அமைதியை நேசிப்பவனாகவும், அமைதியைப் பரப்புபவனாகவும், அமைதியை விரும்புபவனாகவும் அல்லது சமாதானத்தைத் தோற்றுவிப்பவனாகவும் இருக்கின்றான். இத்தகைய மனிதனே

இன்றைய காலச் சூழலில் தலைமைப் பண்மை அடைய முடிகின்றது என்பதனை வரலாற்றுச் செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றன. அமைதியான பண்பாடான சகிப்புத்தன்மை இந்திய மரபின் ஆணி வேராகும். இந்த சகிப்புத்தன்மை இந்தியச் சமயங்களிலும் தத்தவங்களிலும், அடித்தளமாகக் காலம் காலமாகவும் பரம்பரையாகவும் அமைந்துள்ளன. புகழ் பெற்ற இந்திய சமயமும், தத்துவமும் நமக்கிடையே உள்ள உறவுகள் மேம்படவும், நல்லொழுக்கம், திறமை, அறிவு, மன அமைதி, சாந்தம், இறை அறிவு, சலனமற்ற தன்மை, ஒற்றுமை, நீதி, சகிப்பு, மன்னித்தல், அற ஒழுக்கம், தருமம் ஆகியவற்றைச் சமயங்களும், தத்துவங்களும் கூறி வருகின்றன. அண்டை அயலார்களிடம் கடும் சொல் கூறாது இன்முகம் காட்டி நற்சொல் பேசி, நட்புறவுடன் அனைவரையும் இந்தியப் பண்பாடான சகிப்புத்தன்மை காத்து வருகின்றது.[44] விந்தையான, வியப்பிற்குரிய அமைதியான பண்பாடான சகிப்புத்தன்மையை இந்தியர் அனைவரும் பின்பற்றினால் இந்திய நாட்டில் மக்கள் அனைவரும் செல்வாக்குப் பெற்றவராகவும், தனிப்பட்ட பிரசித்தி பெற்றவராகவும் தோன்றி இந்திய நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து இந்தியப் பண்பாட்டின் சகிப்புத் தன்மையைப் போற்ற முடியும்.[45]

இந்திய மரபில் இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் ஆகியன தத்தமது நம்பிக்கையை அல்லது கொள்கையை அழுத்தமாகச் சொல்வதிலும், சுயமாக மதிப்பீடு செய்து உணர்வதிலும், சுயமாகத் தெளிவாக அறிவதிலும், உறுதியாக இருந்து வந்தன. (எ.கா.) தியானத்தின் மூலம் அமைதி, சாந்தம் ஆகியவற்றை அடைதல், இதை சத்—சித்—ஆனந்தம் என அழைக்கப்படுவர்.

வீடுபேறு அல்லது மோட்சம் என்பது சுத்தமான பூர்ணமான நிலையில் ஏற்படக்கூடிய ஒன்றாகும். நிர்வாணம் அல்லது அமைதி மற்றும் கேவலஞானம் என்பது எல்லையற்ற பரம்பொருளான இறைவனைக் கண்டறிதல் அல்லது உண்மைப் பொருளைக் கண்டறிதலே இந்த உலகத்தில் வாழும் மக்கள் அடைகின்ற இறுதிக் குறிக்கோளாகும்.”[46]

இந்திய சமயத் தத்தவ ஞானிகள் கூற்றுப்படி மனித வாழ்க்கை குறைந்த நாட்களில் வாழ்ந்து அழிவதில்லை. மனித வாழ்க்கை வாழ்வதற்கே என நிரூபிக்கப்படவேண்டும். நிரந்தரமில்லாத மனிதனின் அகங்காரம், தற்பெருமை, ஆகியன அழிந்து இவ்வுலகில் பிரபஞ்சத்துடனும் உலகளாவிய தன்மையுடனும், எல்லையில்லாப் பரம்பொருளான இறைவனுடனும் இணைந்து வாழ்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்கள்.

இந்திய மக்கள் நீதி, அறம், தெய்வீகத்தன்மை, ஆகியவற்றில் ஞான மார்க்கம், ஆன்மீகத்தன்மை ஆகியவற்றில் சிறப்பை பெற்றுள்ளனர். பிரம்மன் இந்த பிரபஞ்சத்தில் மனிதனுக்கு ஊழ் அல்லது தலையெழுத்து என்ற சொல்லை அறிவுப்பூர்வமாகவும், உணர்வுடனும் தோற்றுவித்தார் என்பது இந்து சமயத்தின் நம்பிக்கையாகும். அதாவது ஊழ், தலைவிதி என்பன தன்னிச்சையாக செய்கின்ற செயலாகும். மனிதனின் மொத்த வாழ்க்கையில் அமைதி, சகிப்புத்தன்மை, சாந்தம், சத்தமின்மை ஆகியவை தன்னிச்சையாகத் தோன்றுகின்றன. இந்த அமைதி, சாந்தம், சகிப்புத்தன்மை, ஆசை ஆகியன மனிதனின் ஆர்வத்தின் காரணமாகத் தன்னிச்சையாக தோன்றின எனலாம். (எ.கா.) பிறப்பு, இறப்பு. மறுபிறப்பு என்ற நிலை நேரிடும் பொழுது உலகியல் நிலையில் பாச வலையில் (கன்மா) சிக்குவது போன்றதாகும்.

பரிசுத்தமான, புனிதமான, தெய்வீகத்தன்மையான வாழ்க்கை தொடர்ந்து சிறப்பானதாகும், எல்லாவற்றிற்கும் மேன்மையானதாகவும் இருக்க மனிதனுக்குச் சமாதானத்தையும் அமைதியையும் சாந்தத்தையும் பொருத்தமாக (சுருதி சேர்த்து) இருந்து வாழ்க்கையை மேம்படச் செய்கின்றது. மனிதனின் ஆத்மா மாறக்கூடிய, நிலையற்றதாகத் தோன்றி மறைகின்றது. இப்புவி உலகு எங்கிருந்து தோன்றியதோ அங்கிருந்தே உலக மக்கள் வாழ்க்கைக்குரிய ஆற்றலையும், உணர்வினையும், அறிவினையும் பெறுகின்றனர். மிகச் சிறந்த கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவை எப்பொழுதும் மனிதனுக்கு சமாதானத்தையும், அமைதியையும், சகிப்புத்தன்மையும் தருகின்றன.

சமய – தத்துவ கருத்தியல்களையும், எண்ணங்களையும், சிறிதும் தவறில்லாமல் நல்லவிதப் பண்புகளையும், நடத்தை விதிகளையும், சமுதாயத்திற்கு அளித்து சமுதாயத்தை எப்பொழுதும் கட்டுக்கோப்புக்குள் வைக்க முடியாது. இது எப்பொழுதும் நிகழ முடியாததும், சாத்தியமானதும் அன்று ஏனெனில் இது மனிதனின் சுயவாழ்க்கை முறையாகும். ஆகையால் இது சாத்தியமற்றது. இருப்பினும் எவர் ஒருவரேனும் நற்பண்புகளையும் நடத்தையையும் நிராகரிப்பதோ, மறுப்பதோ கிடையாது. பல வகைப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் தீர்மானம் மூலம் மனித வாழ்க்கையைச் சரித்திர புகழ் பெறுமாறும், நாகரிகச் சமுதாயத்தில் தத்தவச் சிந்தனையோடு வாழ்க்கையைத் தொடரவேண்டும். இந்த தத்துவச் சிந்தனை வாழ்க்கை முறையானது நடைமுறையில் இருக்கும் வாழ்க்கை முறையிலிருந்து சிறிதும் மக்களிடத்தில் வேறுபாடு காட்டாமலும், பிரிவினையையும் ஏற்படுத்தாமலும் இருக்கின்றன.

மனிதர்களிடையே உள்ள நடவடிக்கை, பழக்கவழக்கம், கருத்துக்கள், கடவுள் பற்றிய எண்ணங்கள், ஆகியன உண்மையான நல்ல வாழ்க்கை முறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகள் ஆகும். இவ்வாறு மனிதர்களின் செயல்களையும், சுறுசுறுப்பையும், நடவடிக்கைகளையும் நேரிடையாகப் பார்க்கும் போது உண்மையில் மனிதனிடம் பண்பாடு, நல்லதொரு வளர்ச்சி நிலையை எட்டி உள்ளது என உறுதியாகக் கூறலாம்.

பண்டைய காலத்தில் வாழ்ந்த இந்திய மக்கள் தங்களது பண்பாட்டினையும், அமைதியையும், நட்பினையும், நேசத்தினையும் முழுவதுமாக காலகாலமாகக் காத்து அவற்றை தந்துள்ளனர். பரம்பரையான தங்களுடைய கலைகள், நாகரிகம், அறஒழுக்கம், இசை, சிற்பம், நடனம் முதலியன இலக்கியங்கள் வாயிலாக எடுத்துச் சென்று மனிதர்களையும், சமயச் சான்றோர்களையும் சீர்திருத்திப் பண்பாட்டில் இந்தியா ஒரு சிறந்த நாடாக விளங்குவதற்குப் பண்டைய இந்திய மக்கள் காரணமாக இருந்துள்ளனர் என்பது உண்மையாகும்.

இந்தியர்கள் அறிவியல், விஞ்ஞானத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். யோகம் அல்லது தியானத்தின் மூலம், மனதை அமைதிபடுத்தி அதன் வாயிலாக அறியும் சக்தியையும், மனிதனின் புத்தியையும் அறிய முடியும் என உணர்ந்தனர். இந்த அமைதியான தியானத்தின் வழியாக உள் மனத்தினை அல்லது உள் ஆத்மாவினை அமைதியாக்கி, சாந்தமாக்கி இந்த உலகம் முழுதும் அல்லது பிரபஞ்சம் முழுதும் உள்ள மக்களின் மனதில் பொதுவான ஒரு சமுதாயத்தில் ஒற்றுமை ஏற்படவும் சமுதாயத்தில் அமைதி ஏற்படவும் சமுதாயத்தில் நேசம் ஏற்படவும் ஒவ்வொருவரும் காரணமாக இருக்க வேண்டும் இதனால் சிறந்தொரு சகிப்புத்தன்மையையுடைய சமுதாயமாக அல்லது சகிப்புத்தன்மையையுடைய தேசமாக இந்தியா விளங்கும் எனலாம்.

இயற்கையிலேயே இந்திய மக்கள் அமைதியான பண்பாட்டின் வழியாக நல்ல பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவும், பண்பாட்டை விருத்தி செய்வதிலும், பண்படுத்துவதிலும், உலகப்பற்று அற்றும், பிறர்க்குக் கேடு நினைக்காமலும், பிறர்க்குத் துன்பத்தை அளிக்காத வகையிலும் தன்னலமற்றவர்களாகவும், உலக வாழ்க்கையில் வேறுபட்டும். உலக சம்பந்தமான அலுவல்களைத் தவிர்த்து விடுவதிலும் நல்ல மனப்பான்மையுடையவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் உள்ளனர். இந்திய மக்களின் உயர்ந்த மன நிலையானது எப்பொழுதும் சிறந்த ஞான உபதேசத்தையும், அறிவினையும் புகட்டக் கூடியதாக உள்ளதால் அவர்களை உயர்ந்த மதிப்பிற்குள்ளாக்குகிறது. ஆன்மீகம், வாழ்க்கை வழியில் மட்டுமல்லாது அரசியல் செயல்பாடுகளிலும் சிறந்தவர்களாக மாற்றுகின்றது. மேலும் உலக சம்பந்தமான எல்லா மகிழ்ச்சியான நிகழ்வுகள், சுக துக்கம், நெறி வழுவாத முறைகள், ஆத்ம தியாகம், தன்னலமறுப்பு, எளிமையான நிலை, நேர்மை, சிக்கல் இல்லாத தன்மை, துறவறம் மேற்கொள்ளுதல், சகிப்புத்தன்மையுடன் வாழ்தல் ஆகியவற்றில் விருப்பத்துடன் இருந்து தன் வாழ்நாளில் நல்ல முன்னேற்றம் அடைவதே தனது உயர்ந்த குறிக்கோளாக மரபு சார்ந்த இந்திய மக்கள் கருதுகின்றார்கள்.

இந்திய மரபு சார்ந்த மனிதன் தெய்வீகத் தன்மையினால் ஞானம் பெற்றும், சிறந்த சக்தியினையும், ஆற்றலையும் பெற்றுத் தன்னுடைய வாழ்க்கையில் அமைதியையும், சகிப்புத்தன்மையையும் உடையவனாகப் பற்றற்றுத் தன்னடக்கத்துடனும், புலனடக்கத்துடனும், பிறரிடத்து அன்புடனும் வாழ்ந்து நிர்வாண நிலையை எய்துவர். இத்தகைய எல்லா விசேஷ குணம் உடைய மனிதர் யோகியைப் போன்று தன்னுடைய சாதனை மற்றும் செயல்கள் மூலம் கண்ணாடி போன்று பிரதிபலிப்பார் என்பதில் ஐயம் இல்லை.

அமைதியான பண்பாடனது சகிப்புத்தன்மையையும், அறத்தையும், ஒழுக்கத்தையும் மக்களுக்கு போதிக்கின்றது. மேலும் இப்பண்பாடனது சமுதாயத்திற்கு அநீதி இழைக்காமலும், தீய செயல் புரியாமலும், ஹிம்சை, கொடுமையான தாக்குதல் செய்யாமலும் சமுதாயத்தைக் காக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.

காந்திஜி அறத்தைப் பற்றியும், உண்மையைப் பற்றியும், நீதி சம்பந்தமானவற்றையும், தன்னுடைய ஒப்பற்ற செயல்களால் மக்களிடையே நிலைநாட்டினார். இது மனித வரலாற்றில் ஒரு புரட்சிகரமான செயலாகும். இந்திய அரசியல் வரலாற்றில், உலக நூற்றாண்டில் காந்தியடிகள் பல சமுதாயத்திற்கிடையேயும், சமூகத்திற்கிடையேயும், பல தேசங்களுக்கிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்தி அமைதியான சகிப்புத் தன்மையுடன் ஒரு பண்பாட்டு உறவினை ஏற்படுத்தவேண்டும் என முயற்சி செய்தார். இந்த அமைதிப் பண்பாடு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும் என உலகிற்கு அறிமுகம் செய்வித்தார். மேலும் காந்தியடிகள் கூறுகையில் அறிவியலில் இந்தியா மேம்பாடு அடையவும், அரசினை நல்ல முறையில் செயல்படுத்தவும், இந்து, பௌத்தம், சமணம் கிருத்துவம் முதலிய சமயங்கள் தத்தமது வழக்கமான உணர்வுகளுடன் ஒற்றுமையையும், சகிப்புத்தன்மையையும் ஏற்படுத்துவதாக அவரது நூல்களில் வெளிப்படுத்தினார்.

சகிப்புத்தன்மை, அமைதியான பண்பாடு, ஆகியன இந்திய மக்களிடத்தில் காணப்படும் உயர்ந்த ஆன்மீகம், நீதி, அறம் போன்றவற்றிற்கு ஆதாரமாக இருக்கின்றன. இவையே இந்தியாவின் மிகச்சிறந்த மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய காரணமாகும். இதுவே இந்திய நாட்டின் ஆட்சியின் மீது அதிகாரம் செலுத்தி, கணிசமான தீர்மானங்கள், கொள்கைகள், செயல் திட்டம் ஆகியவை நாட்டிற்குள் நடைபெற உதவுகின்றன. இவையே எல்லாவற்றிற்கும் மேலாக தனித்து நின்று அமைதியான பண்பாடு நிலையில் இருக்கின்றன.

இவ்வாறு முயற்சி செய்து தோன்றிய அமைதியான பண்பாடு (அல்லது) சகிப்புத்தன்மை மித மிஞ்சிய அளவில் எல்லையைத் தாண்டும் போது, அதனைக் கட்டுப்படுத்தியும், தடைகளைச் செய்தும் அமைதிப் பண்பாட்டைச் செழுமைப்படுத்த வேண்டும். எப்பொழுது அமைதியான பண்பாட்டை வளர்த்துச் சீர்படுத்துகின்றோமோ அவை திறமை உள்ளதாகத் தோற்றம் அளிக்கும். இப்பண்பாடு செயற்கையான பரிணாம வளர்ச்சியடைவதை உணரலாம். இந்தச் சகிப்புத்தன்மையுடைய அமைதிப் பண்பாடே அனைத்து உலக மனிதனின் அற்புதமாகும் அல்லது அபூர்வத் தோற்றமாகும். இவையே மனிதத்தன்மையைத் தோற்றுவிக்கின்றன. சுத்தம் செய்யப்பட்ட நாகரிக மனிதனாகவும், எல்லாவற்றையும் அனைத்து எடுத்துச் செல்லுகின்ற பண்பாளனாகவும், இரக்கப் பண்புகள் உடையவனாகவும் ஒரு தனி மனிதன் இந்த மனித சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றான் என்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது இந்திய பண்பாட்டின் சகிப்புத் தன்மையான அமைதியான பண்பாடேயாகும்.

அமைதியான பண்பாடு அல்லது அமைதியான கலாச்சாரம் என்பது அடிப்படையில் ஒரு சிறந்த தரமான உயர்ந்த நிலையில் உள்ள குடியாட்சியை அனுசரிக்கின்ற நிலையாகும். அதாவது மிதமான மதீப்பீடு, நடத்தைகள், ஒழுக்கம், கொள்கை ஆகியனவற்றை கூறுவதாக கொள்ளலாம். ஒரே சம காலத்தில் இருக்கின்ற பலவித முக்கியமான விஷயத்தைப் பார்த்தோம் என்றால் சகிப்புத் தன்மை என்பது நமது பழக்க வழக்கமான விவேகம், அறிவு, புத்தி, ஒற்றுமை, புரிந்து கொள்ளும் சக்தி, திட்டமிடுதல், இரகசிய ஏற்பாடு ஆகியவனாக கருதலாம்.

உண்மை என உறுதி செய்யப்படாதவற்றை விட்டுவிட வேண்டும். பொதுவான பண்புகளுக்கிடையே பொதுவான சமூகத்திற்கிடையே, சர்வதேச அளவில் பொதுவான நடத்தை விதி, கொடுப்பதில், வாங்குவதில், சகோதரத்துவம் ஆகியவற்றில் தீமை ஏற்படாமல் பெருந்தன்மையுடன் ஒரு கௌரவத்தை அதாவது அமைதியான சகிப்புத்தன்மையை இந்தியப் பண்பாடு அளிக்கின்றது.

## ஆய்வின் நோக்கம்

## ஆய்வின் எல்லை

## ஆய்வு முறைமை

இவ்வாய்வு விளக்கமுறை (Descriptive) பகுப்பு முறை (Analytical), திறனாய்வு முறை (Critical) ஆகிய ஆய்வு முறைமைகளை அடிப்படையாகக் கொண்டமைந்ததாகும்.

## ஆய்வு அமைப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை உள்ளிட்ட ஏழு இயல்களைக் கொண்டமைந்தது.

அடிக்குறிப்புகள்

1. G.S.Ghurye, Culture and Society, p.52.
2. செ.பழனிச்சாமி புறநானூற்றில் தமிழ் பண்பாடு, ப.12.
3. கா. அப்பாத்துரை, தென்னகப் பண்பாடு ப.146.
4. அன்பு கணபதி, “பண்டைத் தமிழர் பண்பாடு” உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர். ப.5.
5. சொ.பரமசிவம், பெரிய புராணம் காட்டும் பண்பாடு. ப.3.
6. திருக்குறள். பரிமேலழகர் உரை, ப.373.
7. சென்னைப் பல்கலைக்கழக அகராதி, தொகுதி – 4—ப.245
8. ந.சி.கந்தையாபிள்ளை, செந்தமிழ் அகராதி, பக். 409—410.
9. Tamil Lexicon, Vol.IV, Part, I 1963, p.1.
10. க.ப.அறவாணன், தமிழர்கள் மேல் நடந்த பண்பாட்டு படையெடுப்புகள், ப.29.
11. தெ.பொ.மீனாட்சி சுந்தரம், தமிழும் பண்பாடும், பக் 9—10.
12. கா.அப்பாத்துரை, மே.கா.நூ.பக். 167—168.
13. ஞா.தேசநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப.6.
14. தெ.பொ.மீனாட்சி சுந்தரம், மே.கா.நூ.ப.12.
15. நற்றிணை, பாடல், 355.
16. திருக்குறள், 580
17. அ.மு.பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும் ப.9.
18. சொ.பரமசிவம், மே.கா.நூ.ப.9.
19. திருக்குறள், 996
20. இ.பி.டைலர், Quoted in A.L.Krober, Anthropology, ப.222.

21. தனிநாயகம், Tamil Culture and Civilization, ப.10.

22. “Civilization is what we have and culture is what we are” G.S.Ghurye culture and society, p.3.

23. கே.எம். பணிக்கர், op.cit., p.2

24. ஞா.தேவநேயப் பாவாணர், மே.கா.நூ.ப.9

25. மேலது, ப.1

26. மேலது, ப.1

27. டி.எஸ்.ராமதாஸ், இந்தியப் பண்பாடு, ப.10

28. மேலது, ப.11

29. மேலது, ப.11

30. மேலது, ப.30

31. எஸ்.அபிட் ஹுசைன், இந்தியாவின் தேசியப்பண்பாடு, ப.20.

32. மேலது, ப.22

33. புறநானூறு – பாடல் — 192

34. கலைக்களஞ்சியம், தொகுதி – 6, ப.402

35. ஆங்கிலம், தமிழ், அகராதி, சென்மைப் பல்கலைக்கழகம், ப.728

36. International Ed., The Encyclopedia of Americana, பகுதி – 23, ப.38

37. ஜேம்ஸ் ஹாஸ்டின் Encyclopedia of Religion and Ethics, பகுதி – 23, ப.38

38. ஹேச்.எம்.ஜோஷி, concept and Role of Tolerance in Indian culture. ப.15

39. கே.அருணாசலம், The Role of Tolerance in Contemporary Indian Science, ப.78

40. ஜேம்ஸ் ஹாஸ்டின், மு.கூ.நூ, பகுதி. 12, ப.298

41. ராம்சிங், The Role of Tolerance in Indian culture, ப.33

42. ஆர்.பாலசுப்ரமணியன், The Role od Tolerance in Indian culture, p.3

43. மேலது, பக். 10—12.

44. மேலது, ப.15

45. மேலது, ப.17

46. ஹெச்.எம்.ஜோஷி, Concept and Role of Tolerance in Indian culture, ப.8